கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2013 / 2014 (ஜனவரி - 2018)

# HYS 2133 Twentieth Century World
# HYS 2133 இருபதாம் நூற்றாண்டு உலக வரலாறு

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்.

---

## பகுதி – I

01. மேல்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு இருபதாம் நூற்றாண்டு உலக வரலாற்றின் பிரதான இயல்புகளை எடுத்துக் கூறுக.
(அ) முதலாம், இரண்டாம் உலக யுத்தங்கள் (07 புள்ளிகள்)
(ஆ) நாஷிசம், பாஷிசம், சோஷலிசம், மக்களாட்சி (07 புள்ளிகள்)
(இ) உலக சமாதான நிறுவனங்களின் தோற்றம் (06 புள்ளிகள்)

02. "முதலாம் உலக யுத்தம் ஐரோப்பிய யுத்தமேயாகும்" மேல்வரும் தலைப்புக்களின் கீழ் இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.
(அ) அரசியல் காரணங்கள் (07 புள்ளிகள்)
(ஆ) பொருளாதாரக் காரணங்கள் (07 புள்ளிகள்)
(இ) சமூகக் காரணங்கள (06 புள்ளிகள்)

03. வூட்டோ வில்சனின் 14 அம்சத் திட்டத்தின் ஒரு அங்கமான "சர்வதேச சங்கம்" தோல்வியடைந்தமைக்கான காணங்களை மேல்வரும் தலைப்புக்களை முக்கியத்துவப்படுத்தி ஆராய்க.
(அ) நேச நாடுகளின் சுயநலச் செயற்பாடு (10 புள்ளிகள்)
(ஆ) மத்திய வல்லரசுகளை (இத்தாலி, ஜேர்மன்) அடக்கும் திட்டம் (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. 1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் வோல்சுவிக் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவத்தை விமர்சன ரீதியில் ஆராய்க. (20 புள்ளிகள்)

05. இரண்டாம் உலக யுத்தம் தவிர்க்க முடியாதமைக்கான காரணங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

06. பனிப்போரின் தோற்றத்திற்கான சூழ்நிலைகள் பற்றி ஒரு கட்டுரை வரைக. (20 புள்ளிகள்)

07. மேல்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டு பற்றி வரலாற்றுக் குறிப்பெழுதுக.
(அ) மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டம்
(ஆ) சார்க் அமைப்பு
(இ) பலஸ்தீனிய விடுதலை இயக்கம்
(ஈ) நெல்சன் மண்டேலா (1 x 10 x 2 = 20 புள்ளிகள்)